கூட்ட எண் 18
2018 - 2019 -ம் ஆண்டு

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள் 04.03.2019.

2019-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04.03.2019ந் தேதி திங்கட்க் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

பொருள்கள்

1. ஆரணி நகராட்சிக்குட்பட்ட காந்தி சாலை பகுதியில் சர்வே எண் 'C' பிளாக் எண் 7, நகரளவு எண் 14(பகுதி)யில் உள்ள இடத்தில் ரூ. 2.50 கோடி மதிப்பீட்டில் DBDFT அடிப்படையில் Public Private Partnership முறையில் 144 எண்ணிக்கையில் கடைகள் கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளி 20.02.2019 அன்று கோரப்பட்டதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி, ஒப்பந்ததாரர்களின் தகுதி குறித்த தொழில் நுட்ப விவரங்கள் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப கூர்ந்தாய்வு குழுவின் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டதில், 27.02.2019ந் தேதிய தொழில் நுட்ப கூர்ந்தாய்வு குழுவின் பரிந்துரையில், திரு.P.பாபு, பாரி ஸ்வீட்ஸ் & பேக்கரிஸ் நிறுவனம் மட்டுமே தகுதி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முதல் அழைப்பாக இருப்பினும் ஒருவர் மட்டுமே தகுதி பெற்ற நிலையில், இப்பணியினை குறித்த காலத்திற்குள் செய்து முடித்து காய்கறி மார்க்கெட்டினை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டியும், இப்பணி நகராட்சிக்கு வருமானம் ஈட்டக்கூடிய வரியில்லா இனங்களை சார்ந்துள்ளதால் நகராட்சிக்கு ஏற்படவுள்ள நிதியிழப்பை தவிர்க்க வேண்டியும், மறு அழைப்பு கோரி காலதாமதம் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு, தொழில் நுட்ப கூர்ந்தாய்வுக் குழுவின் பரிசீலனையின்படி, தகுதி பெற்ற ஒப்பந்ததாரர் திரு.P.பாபு, பாரி ஸ்வீட்ஸ் & பேக்கரிஸ் 215/A காந்தி ரோடு ஆரணி அவர்களின் விலை விகிதம் அடங்கிய உறை 03.03.2019 அன்று பிரிக்கப்பட்டதில், மேற்படி நபர் ஆண்டு பிரீமியத் (காப்பீட்டு) தொகையாக ரூ.27.50 இலட்சம் செலுத்தவும், மூன்றாண்டிற்கு ஒருமுறை (காப்பீட்டுத் தொகையில்) 3% விழுக்காடு கூடுதலாக்கி செலுத்தவும், இசைவு தெரிவித்துள்ளதை ஏற்று பணியினை ஒப்படைக்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், இப்பணியினை குறித்த காலத்திற்குள் செய்து முடிக்க வேண்டியுள்ளதாலும், நகராட்சிக்கு வருமானம் ஈட்டக்கூடிய வரியில்லா இனங்களை சார்ந்த பணியாதலாலும், முதல் அழைப்பு என்ற போதிலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரி மேலும், நாட்கள் கூடுதலாவதை தவிர்க்கும் பொருட்டும், நகராட்சியின் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டும், திரு.P.பாபு, பாரி ஸ்வீட்ஸ் & பேக்கரிஸ் 215/A காந்தி ரோடு ஆரணி திருவண்ணாமலை மாவட்டம் அவர்களின் விலை விகிதத்தில் குறிப்பிட்டுள்ள ஆண்டு பிரீமியத் (காப்பீட்டு) தொகையை ஏற்கலாம். (கோப்பு எண் 1564/2018/இ1)

தனி அலுவலர்,
ஆரணி நகராட்சி.